# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | |
|---|---|
| SC.No. | : 52/2023 |
| P.W. | : 9 |
| Name | : திருமதி. சசிகலா |
| Husband Name | : திரு. மதன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 47 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.09.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது பெருந்துறை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணியாற்றி வருகிறேன். கடந்த 20-09-2022 அன்று நான் கோபிசெட்டிபாளையம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணியில் இருந்த சமயம் கவுந்தப்பாடி காவல்நிலைய கு.எண். 265/2022 வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலமாகப் பெற்று அவற்றை நீதித்துறை நடுவரின் பார்வைக்கு சமர்ப்பித்தேன். மேற்படி வழக்கு

சொத்துக்களை கவுந்தப்பாடி காவல் நிலைய காவல் ஆய்வாளரின் வேண்டுகோளின்படியும், நீ.ந.அவர்களின் உத்தரவுப்படியும் கோவை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஆய்வுக்காக மூடி முத்திரையிட்டு தலைமை காவலர் ரியாஸ் அகமது மூலமாக அனுப்பிவைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | |
|---|---|
| SC.No. | : 52/2023 |
| P.W. | : 10 |
| Name | : திரு. ராஜா |
| Father Name | : திரு. பாண்டுரங்கன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 43 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.09.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது பவானி தாலுக்கா, ஓடத்துறை "பி " கிராம நிர்வாக அதிகாரியாக பணியாற்றி வருகிறேன். கடந்த 2021ம் ஆண்டு சலங்கபாளையம் கிராம நிர்வாக அதீகாரியாக பணியில் இருந்த சமயம் 04-09-2022 அன்று காலை 6.30 மணியளவில் எங்கள் கிராமத்தில் உள்ள ஒரு நபர் ஒரு கொலை நடந்திருப்பதாக எனக்கு தகவல் சொன்னார். அதன் அடிப்படையில் கொலை நடந்த இடத்திற்கு நான் சென்றேன். போலீசார் ஏற்கனவே அங்கிருந்த உடலை எடுத்துசென்றுவிட்டார்கள். போலீசார்

பாய் ஒன்றையும், சீட்டு கட்டு 150 எண்ணிக்கை உள்ள சீட்டுகளையும், பாயில் ரத்தம் உறைந்து இருந்ததையும் உடைந்த பிளைவுட் சீட்டுகள் இரண்டையும், ஒரு கடப்பாரை போன்ற இரத்தக்கறை படிந்த ஒரு கம்பியையும் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள். அவ்வாறு கைப்பற்றிய சமயத்தில் நானும், சதீஷ்குமார் என்பவரும் இருந்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் 1வதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். 2வதாக உள்ள கையெழுத்து சதீஷ்குமாருடையது. **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3. பாய் ஒன்று சா.பொ. 1 சீட்டு கட்டு 150 எண்ணிக்கை உள்ள சீட்டுகள் சா.பொ.2. , உடைந்த பிளைவுட் சீட்டுகள் இரண்டு சா.பொ.3. ஒரு கடப்பாரை போன்ற இரத்தக்கறை படிந்த ஒரு கம்பி சா.பொ.4.** 14-09-2022 அன்று கவுந்தப்பாடி காவல்நிலைய உதவி ஆய்வாளர் சுபாஷ் எனக்கு போன்செய்து மேற்படி சம்பவத்தில் சம்பந்தப்பட்ட எதிரியை காவல்துறை காவலுக்கு எடுத்திருப்பதாகவும், அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க தயாராக இருப்பதாகவும், அதனால் என்னை சாட்சியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார் அதன் அடிப்படையில் நான் காவல்நிலையத்திற்கு சென்றேன். மேற்படி எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். தன்னை அழைத்துச்சென்றால் தான் அணிந்திருந்த பனியன், டி-சர்ட், லுங்கி ஆகியவற்றை கேரிபேக்கில் வைத்திருப்பதாக சொன்னார். ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், எனது கிராம உதவியாளரும் சாட்சியாக கையெழுத்துசெய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வதாக உள்ள கையெழுத்து என்னுடையது. 2வதாக உள்ள கையெ-ழுத்து கிராம உதவியாளருடையது. **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி**

**அ.சா.ஆ.4.** பின்னிட்டு மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரி கொலை நடந்த இடத்திற்கு அருகில் ஒரு புதருக்கு அழைத்துசென்று கேரிபேக்கில் இருந்த பனியன், டி-சர்ட், லுங்கி ஆகியவற்றை எடுத்து ஆஜர்படுத்தினார். அதை போலீசார் மகசரில் கைப்பற்றினார்கள். மகசரில் நானும், எனது கிராம உதவியாளரும் சாட்சியாக கையெழுத்துசெய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வதாக உள்ள கையெழுத்து என்னுடையது. 2வதாக உள்ள கையெ-ழுத்து கிராம உதவியாளருடையது. கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.5.** என்னிடம் காண்பிக்கப்படும் **டி-சர்ட் சா.பொ.5, லுங்கி சா.பொ.6. கேரிபேக் சா.பொ.7.** போலீசார் சம்பவ இடத்தை என் முன்பாகவும், சதீஷ்குமார் என்பவர் முன்பாகவும் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தார்கள். பார்வை மகசரில் உள்ள 1வதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **பார்வை மகசர் அ.சா.ஆ.6.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எங்கிருக்கும்போது எனக்கு தகவல் கிடைத்தது என்றால் வீட்டில் இருந்தேன். எனது வீடு பவானி காடையம்பட்டியில் உள்ளது. போலீசார் என்னை விசாரித்த சமயம் என் வீடு பவானி காடையம்பட்டியில் உள்ளது என்று சொன்னேனா என்றால் ஆமாம். நான்போலீசார் விசாரணையில் என் வீட்டின் முகவரியை சொல்லவில்லை என்றால் சரிதான். தகவல் நேரில் கிடைத்ததா என்றால் போன் மூலமாக சொன்னார்கள். யார் எந்த போன் மூலமாக சொன்னார் என்றால் கிராமத்தில் இருந்தவர் சொன்னார் போன் நெம்பர் தற்போது தெரியவில்லை. தகவலானது போன்மூலமாக கிடைத்தது என்று போலீசாரிடம் சொன்னேனா

என்றால் போலீசார் கேட்கவில்லை. நான் சொல்வதுபோல் தகவல் எதுவும் பொதுமக்களிடமிருந்து கிடைக்கவில்லை என்றும், போலீசாரிடமிருந்துதான் தகவல் பெற்று சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரியல்ல. எனக்கு தகவல் கிடைத்த நேரம் என்னவென்று போலீசாரிடம்சொல்லவில்லை என்றால் ஆமாம். நான் சம்பவ இடத்திற்கு சென்ற சமயத்தில் போலீசார் அங்கிருக்கவில்லை என்றால் இருந்தார்கள். போலீசாருடன் பொதுமக்கள் யாராவது இருந்தார்களா என்றால் வெளியே தான் இருந்தார்கள் சம்பவ இடத்தில் இருக்கவில்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது போலீசார் பொருட்களை கைப்பற்றியிருந்தார்கள் என்றால் இல்லை சம்பவ இடத்தில் தான் இருந்தது. கம்பி எந்த இடத்தில் கிடந்தது என்றால் ரத்தக்கறை படிந்த இடத்திலிருந்து 10 அடி தூரம் தள்ளி இருந்தது வடக்கு திசை என்று நினைக்கிறேன். நான் கம்பி கிடந்த இடத்தை பார்க்கவில்லை என்றும், அதனால் தான் எந்த திசை என்று என்னால் சொல்ல இயலவில்லைஎன்றால் சரியல்ல. கம்பி கிடந்த இடம் மண் தரையா அல்லது சிமெண்ட் போட்ட இடமா என்றால் மண் பகுதியில் கிடந்தது. பார்வை மகசரில் முதலில் கையெழுத்துசெய்த பிறகு தான் கைப்பற்றுதல் மகசரில் நான் கையெழுத்துசெய்தேன் என்றால் சரிதான். ஒருமுறை தான் பார்வை மகசரில் கையெழுத்து போட்டதாகவும் அப்போது தான் சொத்துக்கள் கைப்பற்றியதாகவும் சாட்சி கூறுகிறார். அ.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி ஆவணத்தில் தேதி 04-09-2022 அன்று உள்ளது என்றால் சரிதான். நான் 05-09-2022 அன்று தேதி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் போலீசார் 04-09-2022 அன்று சொ்துதுக்கள் எதையும் கைப்பற்றவில்லை என்றும்,

காவல்நிலையத்தில்வைத்து தயாரித்த ஆவணத்தில் போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில் 05-09-2022 அன்று கையெழுத்துசெய்துவிட்டு தற்போது 04-09-2022 தேதியில் என் முன்பாக அ.சா-ஆ.3 ஆவணத்தின்படி சொத்துக்கள் கைப்பற்றியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 16-09-2022 தேதியில் போலீசார் என்னை அழைத்ததாக கூறும் நாளில் எங்கிருந்தேன் என்றால் நான் அலுவலகத்தில் இருந்தேன். நான் காவல்நிலையத்திற்கு செல்வதற்கு முன்பு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாரா என்றால் என் முன்பாக போலீசார் எதிரியை விசாரித்தார்கள் அப்போது தான் வாக்குமூலம் கொடுத்தார். வாக்குமூலத்தை போலீசார் எப்போது எழுதினார்கள் என்றால் தெரியவில்லை. பிளாஸ்டிக் கவர் என்ன கலர் என்று ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான் பிளாஸ்டிக் கவர் என்று தான் சொன்னார். பிளாஸ்டிக் கவருக்கும், கேரிபேக்கிற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் ஆமாம். ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் ஒளித்து வைத்திருந்ததாக கூறும் டி-சர்ட்டின் கலர் மற்றும் விபரங்களை குறிப்பாக சொன்னாரா என்றால் டி-சர்ட் என்று தான் சொன்னார், கலர் மற்றும் மற்ற விபரங்களை சொல்லவில்லை. எதிரியை காவல் ஆய்வாளர் நீதிமன்ற காவலிலிருந்து தன் காவலுக்கு எடுத்து இந்த வழக்கிற்கு ஏதுவாக ஒரு ஒப்புதல் வாக்குமூலமாக ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டு எதிரி வழக்கு சொத்துக்களை எடுத்து ஆஜர் செய்ததுபோல் ஒரு ஆவணம் உருவாக்கிக்கொண்டார் என்றும், அந்த ஆவணத்தில் போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில் நான் கையெழுத்துசெய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகசரின்படி சொத்துக்களை கைப்பற்றியதாக கூறும் சமயத்தில் மேற்படி இடத்தில் பொதுமக்கள்

யாராவது இருந்தார்களா என்றால் பொதுமக்கள் இருக்கவில்லை. கைப்பற்றியதாக கூறும் உடைகளை எதிரிக்கு அணிவித்து அது அவருக்கு பொருத்தமாக இருக்கிறதா என்று உறுதிப்படுத்திக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் என் முன்னிலையில் எந்த பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றும், ஆய்வாளரின் வேண்டுகோளுக்கிணங்க தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் நான் கையெ-ழுத்துசெய்தேன் என்றும், எதிரிக்கு எதிராக ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.6 ஆவணமான பார்வை மகசரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தற்போது எனக்கு தெரியாது. அ.சா.ஆ.6 ஆவணத்தில் ரத்தக்கறை படிந்த கடப்பாரை கம்பி என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.6 க்கு பின்னிட்டு தான் கைப்பற்றுதல் மகசரில் கையெழுத்துசெய்தேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.6 ல் 04.09.2022 அன்று தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 05-09-2022 ல் கையெழுத்துசெய்ததாக உள்ளது என்றால் ஆமாம். நான் சொல்வதுபோல் அ.சா.ஆ.6 ஆவணம் என் முன்பாக தயாரிக்கவில்லை என்றும், பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன்பேரில் கையெழுத்துசெய்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | |
|---|---|
| SC.No. | : 52/2023 |
| P.W. | : 11 |
| Name | : திரு. சின்னராஜ் |
| Father Name | : திரு. பத்ரன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 62 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.09.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் காவல் உதவி ஆய்வாளராக இருந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 04-09-2022 அன்று கவுந்தப்பாடி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த சமயம் காலை 5.00 மணி அளவில் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தாலுக்கா, சூசையப்பதெருவை சேர்ந்த அன்னக்கலை என்பவருடைய மகன் மைக்கேல் ஆன்டனி என்பவர் நிலைம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரைப் பெற்று நி.கு.எண். 265/2022 இதச

பிரிவுகள் 302 பிரிவில் முதல் தகவல் அறிககை பதிவு செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் தான் அப்போது கொடுக்கப்பட்டது. **புகார் அ.சா.ஆ.7. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 8.** அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பியும், ஒரு நகலை புலன்விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். மற்ற நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார் கொடுத்ததாக கூறும் நாளில் புகார் கொடுத்தவரும், மற்றவர்களும் வந்தார்களா என்றால் புகார் கொடுத்தவர் தான் வந்தார். காவல்நிலையம் வந்தபிறகு தான் புகார் எழுதப்பட்டதா என்றால் ஆமாம். புகார் எழுதப்பட்ட கையெழுத்தும், புகார்தாரரின் கையெழுத்தும் வேறுபட்டு உள்ளது என்றால் ஆமாம் ஆனால் புகார்தாரர் தான் கொடுத்தார். நான் சொல்வதுபோல் புகார்தாரர் எந்தவிதமான புகாரும் கொடுக்கவில்லை என்றும், போலீசார் புகாரை எழுதி அவரிடம்கையெழுத்து பெற்றார்கள் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | | |
|---|---|---|
| SC.No. | : | 52/2023 |
| P.W. | : | 12 |
| Name | : | திரு. சேஷாத்திரி |
| Father Name | : | திரு. அழகிரிசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 51 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.09.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது சென்னை காவல் ஆணையாளர் அலுவலகத்தில் போக்குவரத்து பிரிவில் முதுநிலை புகைப்பட கலைஞராக பணியாற்றி வருகிறேன். கடந்த 04-09-2022 அன்று ஈரோடு மாவட்ட காவல் அலுவலகத்தில் புகைப்பட நிபுணராக பணியில் இருந்த சமயம் கவுந்தப்பாடி காவல்நிலைய சலங்கப்பாளையம் கிராமத்தில் பழனியப்பா நகரில் உள்ள முல்லைசக்தி என்பவருடைய இடத்தில் இருந்த சுஜின் என்பவரது பிரேதத்தையும், சம்பவ இடத்தையும் 6 கோணங்களில்

புகைப்படம் எடுத்தேன். அதை குறுந்தகடிலும் பதிவு செய்து கொடுத்தேன். என்னிடம் காட்ணபிக்கப்படும் புகைப்படங்கள் தான் என்னால் எடுக்கப்பட்டது. **6 புகைப்படங்கள் சா.பொ.8. குறுந்தகடு சா.பொ.9.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**